திங்கட்கிழமையன்று எடுத்துக்கொண்டால் உதவியாக இருக்கும். இதர கேள்விகளுக்கும் மந்திரிகள் பதில் கொடுத்தமாதிரியும் இருக்கும். ஆகவே, சர்க்கார் கட்சித் தலைவர் அவர்கள் இந்த யோசனையை எற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகின்றேன்."

THE HON. SRI C. SUBRAMANIAM :—" Let us see the progress we make to-day. Then, we shall decide the question."

III.—ADJOURNMENT MOTION *RE*

SALE OF ASSETS OF THE MADRAS ELECTRIC TRAMWAYS.

MR. SPEAKER :—" The hon. Member Sri M. Kalyanasundaram has given notice of the following adjournment motion :—

' I move that the House be adjourned to discuss an urgent matter of public importance, namely, the failure of the Government to prevent the sale of the assets of the Tramways to scrap iron merchants to the detriment of the revival of Tramways and also to the proper realisation of the dues of the Government from the said Company.'

Where is the urgency in the matter? How are the Government responsible for this? "

SRI M. KALYANASUNDRAM :—" கனம் சபாநாயகர் அவர்களே, இந்தப் பிரச்னை மிகவும் அவசரமானது ; சர்க்கார் இதற்கு நேரடியான பொறுப்பு உடையவர்களாக இருக்கிறார்கள். டிராம்வே கம்பெனியின் சொத்துக்களின் விற்பனையைத் தடை செய்வதற்கு இப்பொழுதும் சந்தர்ப்பம் இருக்கிறது. சர்க்கார் முயற்சி எடுத்து ஹைகோர்ட்டுக்கு மனுப் போட்டு புல் பெஞ்சுக்கு அப்பீல் செய்தார்களானால், அந்த விற்பனையைத் தடை செய்து வைக்கமுடியும். இது விஷயத்தில் சர்க்கார் உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டியதன் அவசியத்தை அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவரவேண்டும் என்பதற்காகத்தான் இந்த ஒத்திவைப்புப் பிரேரணையைக் கொடுத்து நான் விவாதிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். இது மிக மிக முக்கியமான பிரச்னை என்பதைத் தாங்களும் ஒப்புக்கொள்வீர்கள் என்று நினைக்கிறேன்."

MR. SPEAKER :—" சட்டசபை விதிகளுக்குட்பட்டு, இந்த விஷயம் இப்பொழுது விவாதத்திற்கு எடுத்துக்கொள்வதற்கான அவசரம் இல்லை என்று நினைக்கிறேன்."

SRI M. KALYANASUNDRAM :—" கனம் சபாநாயகர் அவர்களே, இது மிக முக்கியமான பிரச்னை ; அவசரமாக விவாதிக்கப்படவேண்டிய பிரச்னையும் ஆகும். எனென்றால், உடனடியாக சர்க்கார் நடவடிக்கை எடுக்கத் தவறுவார்களானால், டிராம்வேக்கள் விற்கப்பட்டு அவைகள் அகற்றப்பட்டுவிடும். இன்று காலை எனக்கு ஒரு செய்தி வந்திருக்கிறது. பம்பாயிலிருந்து வந்திருக்கக்கூடிய பழைய இரும்பு வியாபாரிகள் இயந்திரங்களை அப்புறப்படுத்துவதற்கு ஆரம்பித்துவிட்டார்களென்றும், பழைய இயந்திரங்களையெல்லாம் உடைப்பதற்கு எற்பாடு செய்துகொண்டிருப்பதாகவும் செய்தி வந்திருக்கிறது. அதனால் ஆத்திரமடைந்து, கவலை கொண்ட சென்னை நகரவாசிகளும், டிராம்வே தொழிலாளிகளும் அந்த இயந்திரங்களை அப்புறப்படுத்துவதைத் தடுப்பதற்காகவேண்டி சத்தியாக்கிரகம் செய்யும் நோக்கத்துடன் திரண்டுகொண்டிருக்கிறார்கள் என்பதையும் கேள்விப்படுகிறேன். இவையெல்லாம் உண்மையில் நம்முடைய நகரத்தின் அமைதியைக் குலைக்கக்கூடிய பிரச்னையாகும் என்பதை சர்க்கார் கவனிக்கவேண்டும்.

" இதற்கு சர்க்கார் எப்படிப் பொறுப்பு என்று தாங்கள் கேட்கலாம். நம்முடைய முதல் அமைச்சர் ஸ்ரீ காமராஜ் நாடார் அவர்கள் பதவிக்கு வந்த பிறகு, டிராம் வண்டிகள் மீண்டும் ஓட்டப்படும் என்ற புது நம்

11th August 1954] [Sri M. Kalyanasundram]

பிக்கையை அளித்து வந்தார்கள். சமீபகாலத்தில் அவர்கள் கொடுத்த உறுதிகளெல்லாம் அந்த நம்பிக்கையைப் பலப்படுத்துவதாக இருந்தது. ஆனால், திடீரென்று நேற்று ஹைகோர்ட் தீர்ப்பைப் பார்க்கும்போது சர்க்கார் எடுத்திருக்கக்கூடிய நடவடிக்கைகள் சந்தேகத்திற்கு இடமாக இருக்கிறது. ஏற்கெனவேயுள்ள மந்திரிசபை டிராம் வண்டிகளை ஓட்டுவதில்லை என்று முடிவு எடுத்திருந்தது. அதே முடிவுதான் இன்னும் இருந்து வருகிறது என்பது ஹை கோர்ட்டின் முன்பு சர்க்கார் வக்கீல் நடந்துகொண்ட மாதிரியிலிருந்து வெளியாகிறது. சர்க்கார் வக்கீல், இந்த விற்பனையை ஆட்சேபிக்கவில்லை. ஜனங்களுடைய தொந்தரவுக்காக பயந்து ஆட்சேபனை மனு ஒன்றை சர்க்கார் போட்டிருந்தாலும்கூட, சர்க்கார் வக்கீல், 'சர்க்கார் டிராம் வண்டிகளை எடுத்து நடத்துவதற்குத் தயாராய் இருக்கிறார்கள், அல்லது கார்ப்பரேஷன் நடத்துவதாயிருந்தால் அதற்கு அனுமதி அளிப்பதற்கு சர்க்கார் தயாராயிருக்கிறது' என்று உறுதிமொழி கொடுத்திருந்தால் நேற்று ஹை கோர்ட் நீதிபதி அந்த விற்பனையைத் தடை செய்வதற்கு தயாராய் இருந்த விவரங்களை நான் அங்குள்ள வக்கீல் மூலமாகத் தெரிந்துகொண்டேன். சர்க்காருக்கு டிராம் கம்பெனியிலிருந்து வர வேண்டிய பணம் பாக்கியிருக்கிறது."

MR. SPEAKER :—" உங்களுடைய ஒத்திவைப்புப் பிரேரணையின் தகுதியையும், அது எப்படி அவசரமான விஷயம் என்பதையும் மாத்திரம் சொல்லவேண்டும்."

SRI M. KALYANASUNDRAM :—" இந்தப் பிரச்னை அவசரமானது. ஏனென்றால் சர்க்காருக்குச் சேரவேண்டிய பணம் வந்து சேரவில்லை. பணம் வரவேண்டிய பாக்கி வந்து சேராமலிருக்கக்கூடிய ஆபத்து இப்பொழுது வந்திருக்கிறது. இயந்திரங்களை யெல்லாம் இப்பொழுது அவர்கள் அப்புறப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். இதைத் தடுப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை சர்க்கார் எடுத்துக்கொள்ளவேண்டியது அவர்கள் பொறுப்பும் கடமையும் ஆகும்."

MR. SPEAKER :—" Let not the hon. Member go into the merits of the question. It is the duty of the Government to collect their dues and they know how to collect them. So, I think this motion does not come under the rules."

SRI M. KALYANASUNDRAM :—" சர்க்கார் அலட்சியமாக இருந்தால் அதை எடுத்துக்காட்டவேண்டியது இந்தச் சபையினுடைய பொறுப்பு. இயந்திரங்கள் அப்புறப்படுத்தப்படுவதின் விளைவாக தொழிலாளிகள் 1,800 பேர்களுக்கு வேலையை இழந்ததற்காக நஷ்ட ஈடு கொடுக்கவேண்டிய பிரச்னை இருக்கிறது. அதை ரெவினியு நடவடிக்கை மூலம் சர்க்கார் எடுத்து வசூல் செய்து கொடுத்திருக்கமுடியும். அதற்கும் உத்தரவாதம் இல்லை. சர்க்காருக்கு வரவேண்டிய பாக்கிப் பணத்திற்கும் யாதொரு உத்தரவாதமும் இல்லை. ஏனென்றால் இனிமேல் டிராம் வண்டிகள் ஓட முடியாது என்ற முடிவும் தெளிவாகிவிட்டது."

MR. SPEAKER :—" If the hon. Member wants to discuss the question of revival of tramways, he can bring forward a separate resolution. It is a fit matter for a resolution." 12-10 p.m.

SRI M. KALYANASUNDRAM :—" It is only to discuss that subject and to put up proposals that I want you to adjourn the House so that we can discuss this matter for two hours. It is exactly for this purpose I have brought forward this adjournment motion."

* THE HON. SRI C. SUBRAMANIAM :—" Sir, evidently the hon. Member on the opposite side is under a misapprehension with regard to the facts of this case. The company is under liquidation

and the matter is before the court. The entire property and assets belonging to the company have to be disposed of under the directions of the court. The only thing that we can do is to make representations before the court. We have made representations and the Corporation has also made representations to the court. The Judge has given his judgment. Certainly, this is not the place where the judgment can be discussed. The question of filing an appeal and other questions are to be considered separately and cannot be raised by a motion like the one given notice of by the hon. Member on the floor of the House. Even with regard to the two points raised in the adjournment motion, I am afraid that this is not the forum where we can discuss those points. Moreover, I wish to point out that this is not a matter of urgent public importance."

MR. SPEAKER :—" As for the first part of the adjournment motion, viz., revival of tramways, it is a fit subject to be considered by a separate resolution. As for the second part, it is the duty of the Government to collect dues and they know how to do it. For these reasons, the questions raised in the adjournment motion are not of urgent public importance. So I rule the motion out of order."

IV.—GOVERNMENT MOTIONS.

ELECTION OF ONE MEMBER OF THE ASSEMBLY TO THE BOARD OF INDUSTRIES.

THE HON. SRI M. BHAKTAVATSALAM :—" Sir, I move—

'*That as Sri S. S. Ramasami Padayachi, M.L.A., has resigned his membership on the Board of Industries having accepted the Office of Minister, in accordance with section 3 (1) (h) of the Madras State Aid to Industries Act, 1922 (Madras Act V of 1923), and rule 3 of the rules framed thereunder, this Assembly do proceed on a date to be fixed by the Speaker to elect one person to be the Assembly's representative on the Board of Industries constituted under the Act.*' "

MR. SPEAKER—" The question is—

'That as Sri S. S. Ramasami Padayachi, M.L.A., has resigned his membership on the Board of Industries having accepted the Office of Minister, in accordance with section 3 (1) (*h*) of the Madras State Aid to Industries Act, 1922 (Madras Act V of 1923), and rule 3 of the rules framed thereunder, this Assembly do proceed on a date to be fixed by the Speaker to elect one person to be the Assembly's representative on the Board of Industries constituted under the Act.' "

The motion was put and carried.